**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 90 /2022, Mangalamedu P.S. PW -1.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சரவணன் | Nationality | : | - |
| Father/ Husband Name | : | சங்கரநாராயணன் | Occupation | : | டிரைவர் |
| Village | : | சென்னை | Religion | : | - |
| Taluk | : | சென்னை | Age | : | 36/2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 19.06.2025 | | | | | |

எதிரி ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். எனது நண்பர் சுதர்சன் என்பவரது உறவினரின் மஞ்சள் நீராட்டு விழாவிற்கு பங்கேற்பதற்காக கரூரில் பத்திரிக்கை வைத்துவிட்டு நான், சுதர்சன், சுதர்சனின் மனைவி, சுதர்சனின் மகள் ஆகியோர் சுதர்சனின் நண்பர் வாகனமான ஹீண்டாய் TN 05 CC2272 என்ற வாகனத்தில் திருச்சி வழியாக சென்னை நோக்கி சென்றுகொண்டிருந்தோம். நான் மேற்படி வண்டியை ஓட்டினேன். 24.04.2022 ம் வருடம் விடியற்காலை 3.45 மணிக்கு திருமாந்துறை சுங்கச்சாவடிக்கு அருகே வந்தபோது காய்கறி வண்டி கவிழ்ந்ததால் ஏற்பட்ட போக்குவரத்து இடையூறால் அனைத்து வாகனங்களும் நின்றுகொண்டிருந்தது.

2. எங்கள் வாகனதை நிறுத்தி விட்டோம். எங்களுக்கு முன்னால் அசோக்லைலேண்ட் லாரி ஒன்று நின்று கொண்டிருந்தது. எங்கள் வாகனத்திற்கு பின்னால் ஈச்சர் வாகனம் லோடுடன் நின்று கொண்டிருந்தது. போக்கவரத்து சீர் செய்யப்பட்டவுடன் எங்களுக்கு முன்னால் உள்ள வாகனங்கள் மெதுவாக நகர ஆரம்பித்தது அப்போது எங்களுக்கு பின்னால் நின்றிருந்த ஈச்சர வாகனம் எங்கள் கார் மீது வேகமாக மோதியது. நான் காரை விட்டு இறங்கி ஈச்சர் வாகனத்தின் டிரைவரை விசாரித்தேன். அவர் ஈச்சர் வாகனத்தில் பின்னால் வந்த வாகனம் இடித்தது என்று கூறினார்.

3. நான் இறங்கி போய் பார்த்தபோது மேற்படி ஈச்சர் வாகனத்தில் மீது மாருதி டிசையர் வாகனம் மோதி முழுவதும் சேதம் ஆகி இருந்தது. மேற்படி மாருதி டிசையர் கார் பின்னால் டாரஸ் லாரி மோதி இருந்தது. மாருதி

DMC, COURT, KUNNAM

டிசையரில் பயணம் செய்த ஓட்டுனர், மற்றும் ஒரு வயதான பெண்மணி, 45 வயது மதிக்கத்தக்க மற்றுமொரு பெண், சுமார் 16 வயது உடைய சிறுமி, 4 வயது குழந்தை ஆகியோர் அந்த காரில் இருந்தார்கள். மேற்படி 4 வயது குழந்தை தவிர மற்ற அனைவரும் விபத்தில் பலத்த காயம் அடைந்து சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள்.

4. மேற்படி டிசையர் காரை மோதிய டாரஸ் லாரியை போய் பார்த்தேன் அங்கு டிரைவர் இல்லை. மறுநாள் காவல் நிலையம் சென்றபோது விபத்து சம்பந்தமாக பெருமாள் என்பவர் காவல் நிலையத்தில் சரணடைந்ததாக போலிசார் சொன்னார்கள். ஆனால் டிரைவரை என்னால் பார்க்க இயலவில்லை. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u> :–

1. நான் 10 வகுப்பு படித்துள்ளேன். எவ்வளவு காலமாக கார் ஓட்டுகிறேன் என்றால் 15,20 வருடமாக கார் ஓட்டுகிறேன். சம்பவம் நடந்த பிறகு நான் 100,108 போன் செய்தேனா என்றால் இல்லை. இந்த விபத்து சம்பவத்திற்கு முன்பாக ஏற்கனவே ஒரு காய்கறி வண்டி விபத்திற்குள்ளாகி இருந்தது. அதை நெடுஞ்சாலைதுறை சரிசெய்து கொண்டிருந்தார்கள். இந்த விபத்து நடந்த இடத்திற்கும் காய்கறி வண்டி விபத்து நடந்த இடத்திற்கும் சுமார் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 200 மீட்டர் தூரம் இருக்கும்.

2. என்னுடைய வாகனத்திற்கு முன்னால் சென்ற வாகனம் சாலையில் இடது புறத்தில் சென்றது என்றால் சரிதான். என்னுடைய வாகனம் முன்னால் சென்ற வாகனம் மீது மோதியது ஆனால் அந்த வண்டி பார்க்கவில்லை சென்றுவிட்டார்கள். நான் காரை ஓட்டியபோது எனது கவனம் முழுவதும் முன்னால் தான் இருந்தது என்றால் சரிதான். எனது வாகனத்தின் பின்னால் என்ன நடந்தது என்று நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். வண்டி இடித்த சத்தம் கேட்டு பின்னர் இறங்கி பார்த்தேன் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோனவர்கள் பெயர், முகவரி எனக்கு தெரியாது. ஊர் மட்டும் கரூர் என்று சொன்னார்கள்.

3. சம்பவத்தின்போது அங்கு போலிசார் வந்துவிட்டார்கள். சம்பவத்தின்போது போலிசார்கள் எப்போது வந்தார்கள் என்றால் சுமார் மணி நேரம் கழித்து வந்தார்கள். சம்பவ நடந்த பிறகு நான் போலிஸ் ஸ்டேசன் சென்றேனா என்றால் மறுநாள் காலையில் 7.30 ழு 8 மணிக்கு சென்று மாலை வரை காவல் நிலையத்தில் வாசலில் தான் அமர்ந்து இருந்தோம். வேறு எங்கும் செல்லவில்லை. விபத்து சம்பந்தமாக யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. அதன்பிறகு போலிசார் எப்போது

DMO, UDUMALPURAM

எங்களை விசாரித்தார்கள் என்றால் 11.30,12 மணி இருக்கும் என்னை காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். மாலை ஊருக்கு சென்றுவிட்டோம்.

4. நான் சொன்ன விதத்தில் விபத்து சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி மேற்படி விபத்தை ஏற்படுத்தவில்லைஎன்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் இறந்தவர்களின் குடும்பத்தாருக்கு விபத்து காப்பீடு பெறவேண்டி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வேற எதுவும் கையெழுத்து என்னிடம் போலிசார் வாங்கவில்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMJMCOURT, KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 90 /2022, Mangalamedu P.S. PW -2.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுதர்சன் | Nationality | : | - |
| Father/ Husband Name | : | சேகர் | Occupation | : | கார்பெண்டர் |
| Village | : | சென்னை | Religion | : | - |
| Taluk | : | சென்னை | Age | : | 46/2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 19.06.2025 | | | | | |

எதிரி ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கார்பெண்டர் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சரவணன் எனது நண்பர் அவர் டிரைவராக வேலை செய்கிறார். சென்னையில் இருந்து திருநெல்வேலிக்கு எனது மகளின் மஞ்சள் நீராட்டு விழாவிற்கு குடும்ப கோவிலுக்கு பத்திரிக்கை வைப்பதற்காக எனது நண்பரின் கூண்டாய் பதிவெண் TN 05 CC2272 என்ற வாகனத்தில் 22.04.2022 ம் தேதி சென்னையில் இருந்து நான் அ.சா,1, எனது மனைவி, எனது மகள் ஆகியோர் புறப்பட்டு சென்றோம். அங்கிருந்து 24.04.2022 ம் தேதி பொள்ளாச்சி சென்று பத்திரிக்கை வைத்துவிட்டு மேற்படி அனைவரும் சென்னைக்கு திரும்பி வந்து கொண்டிருந்தபோது திருமாந்துறை டோல்கேட்டிற்கு 100 மீட்டர் முன்னால் வந்தபோது விடியற்காலை சுமார் 3.15 மணிக்கு காய்கறி வண்டி கவிழ்ந்ததால் ஏற்பட்ட போக்குவரத்து இடையூறால் அனைத்து வாகனங்களும் நின்றுகொண்டிருந்தது.

2. எங்கள் வாகனதை நிறுத்தி விட்டோம். எங்களுக்கு முன்னால் அசோக்லைலேண்ட் லாரி ஒன்று நின்று கொண்டிருந்தது. எங்கள் வாகனத்திற்கு பின்னால் ஈச்சர் வாகனம் லோடுடன் நின்று கொண்டிருந்தது. சுமார் 3.45 மணிக்கு போக்கவரத்து சீர் செய்யப்பட்டவுடன் எங்களுக்கு பின்னால் நின்ற மேற்படி ஈச்சர் வாகனம் வேகமாக எங்கள் வாகனத்தின் மீது மோதியது. அப்போது நானும் அ.சா.1 டிரைவரும் ஏன் இடித்தாய் என்று மேற்படி ஈச்சர் வாகன டிரைவருடன் சண்டை போட்டோம். அவர் தனக்கு பின்னால் வண்டி இடித்ததாக சொன்னார். நாங்கள் அனைவரும் சென்று பார்த்தபோது மேற்படி ஈச்சர் வாகனத்தில் மீது மாருதி டிசையர் வாகனம் மோதி முழுவதும் சேதம் ஆகி

DMC MUNSIF KUNNAM

இருந்தது. மேற்படி மாருதி டிசையர் கார் பின்னால் டாரஸ் லாரி மோதி இருந்தது. மாருதி டிசையரில் பயணம் செய்த ஓட்டுனர், மற்றும் ஒரு வயதான பெண்மணி, 45 வயது மதிக்கத்தக்க மற்றுமொரு பெண், சுமார் 12 வயது உடைய சிறுமி, 4 வயது குழந்தை ஆகியோர் அந்த காரில் இருந்தார்கள். மேற்படி 4 வயது குழந்தை மற்றும் 45 மதிக்கத்தக்க பெண் தவிர மற்ற அனைவரும் விபத்தில் பலத்த காயம் அடைந்து சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். சிறிது நேரம் கழித்து 45 வயது மதிக்கத்தக்க அந்த பெண்ணும் இறந்துவிட்டார்.

4. போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். நாங்கள் வந்த எனது நண்பரின் வாகனம் பின்புறம் முழுவதுமாகவும், முன்புறம் இடது பக்கம் சேரம் ஏற்பட்டிருந்தது. மேற்படி டிசையர் காரை மோதிய டாரஸ் லாரியை போய் பார்த்தேன் அங்கு டிரைவர் இல்லை. மறுநாள் காவல் நிலையம் சென்றபோது விபத்து சம்பந்தமாக பெருமாள் என்பவர் காவல் நிலையத்தில் சரணடைந்ததாக போலிசார் சொன்னார்கள். ஆனால் டிரைவரை என்னால் பார்க்க இயலவில்லை. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u> :-

1. நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். மேற்படி சம்பவம் நடந்தபோது நான் எனது காரில் டிரைவர் சீட்டுக்கும் பக்கத்து சீட்டில் அமர்ந்திருந்தேன். தற்போது நான் நீதிமன்ற விசாரணையில் சொன்ன விபரத்தை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். எங்களுக்கு முன்னால் சென்ற லாரி இடது பக்கமாக சென்றது. அந்த லாரிக்கு பின்னால் தான் எங்கள் வாகனமும் இருந்தது. டிரபாக் சீர்செய்யப்பட்டு வாகங்கள் செல்ல ஆரம்பித்தபோது தான் சம்பவம் நடந்தது என்றால் சரிதான்.

2. நான் காரில் முன் இருக்கையில் அமர்ந்திருந்ததால் பின்னால் நடந்த விபத்து சம்பவங்கள் எதுவும் எனக்கு தெரியாது. விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த 5 நிமிடத்தில் போலிசார் அங்கு வந்துவிட்டார்கள். விபத்து நடந்த பிறகு காலை 6 மணிக்கு நான் காவல் நிலையம் சென்றுவிட்டேன். வேறு எங்கும் செல்லவில்லை. காலை 9 டூ 10 மணிக்குள் காவல் நிலையத்தில் தான் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். இந்த விபத்து நான் சொன்ன விதத்தில் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

DMCUJUMCOURT,KUMANAM

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUMJM COURT, KUNNAM